# மருத்துவமனையில் கார்பபெனிமேஸ்-உற்பத்தி செய்யும் உயிரிகள் (Carbapenemase-Producing Organisms, CPO) பற்றி அறிதல்
## (Learning About Carbapenemase-Producing Organisms (CPO) in the Hospital)

### கார்பபெனிமேஸ்-உற்பத்தி செய்யும் உயிரிகள் (Carbapenemase-Producing Organisms, CPO) என்பவை யாவை?
### (What are carbapenemase-producing organisms (CPO)?)

- CPO என்பவை, கார்பபெனிம்கள் உட்பட்ட பல்வேறு வகையான ஆன்டிபயாட்டிக்குகளுக்கு எதிர்ப்புத்திறனுள்ள குழுவைச் சேர்ந்த கிருமிகள் (பாக்டீரியா) ஆகும்.
- கார்பபெனிம்கள் என்பவை, பிற பொதுவான ஆன்டிபயாட்டிக்குகள் திறம்படச் செயலாற்றாதபோது பயன்படுத்தப்படும் ஒரு வகையான ஆன்டிபயாட்டிக் ஆகும்.

### இது எப்படிப் பரவுகிறது?
### (How does it spread?)

- CPO-ஐ மலத்தில் அல்லது சிலவேளைகளில் சரும மேற்பரப்பில் கண்டறியலாம்.
- CPO-ஐக் கொண்டுள்ள கைகள் மற்றும் உபகரணங்களிலிருந்து அது ஒருவரில் இருந்து மற்றவருக்குப் பரவக் கூடியது. இது சமூகத்தில் அல்லது உடல்நலக்கவனிப்பு அமைப்புகளில் நிகழலாம்; நீங்கள் எங்கு CPO உடன் தொடுகையுற்றீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாமல் இருப்பதற்குச் சாத்தியமுள்ளது.

### CPO எவ்வளவு தீங்கானது?
### (How harmful is a CPO?)

- *குடியேற்றம்* –CPOகள் மக்களுக்குத் தீங்கு விளைவிக்காமல் வாழ்கின்றபோது இந்தச் சொல் பயன்படுத்தப்படும். பெரும்பாலனவர்களில், CPO-இன் குடியேற்றமானது நம் உடன் வாழும் வேறு ஏதேனும் கிருமிகளை விடவும் அதிக அபாயமானது அல்ல.
- *தொற்றுகள்* – சிலருக்கு தொற்றுகள் ஏற்படக்கூடிய ஆபத்து இருக்கலாம். வேறு ஏதேனும் வகையான தொற்றில் உள்ளது போலவே, இந்தத் தொற்றுகளும் கடுமையானதாக மாறலாம்.
- குடியேற்றம் அல்லது தொற்று ஏற்பட்டுள்ளவர்களிடமிருந்து CPO கள் மற்றவர்களுக்குப் பரவலாம்.
- மருத்துவமனை அமைப்புகளில், சுத்தமில்லாத கைகளில் இருந்தும் பயன்பாடுகளுக்கு இடையில் சரியாகச் சுத்தம் செய்யப்படாத உபகரணங்களில் இருந்தும் ஒருவரில் இருந்து மற்றவருக்கு CPO பரவலாம்.

### இதற்கு எவ்வாறு சிகிச்சையளிக்கப்படுகிறது?
### (How is it treated?)

- CPO குடியேற்றம் உள்ளவர்களுக்கு ஆன்டிபயாட்டிக்குகளைப் பயன்படுத்திச் சிகிச்சையளிக்கப்படாது. CPO-இன் குடியேற்றம் ஆனது சிகிச்சை எதுவும் இல்லாமலே விட்டு விலகக் கூடும்.
- CPO தொற்று உள்ளவர்களுக்கு பெரும்பாலும் ஆன்டிபயாட்டிக்குகள் கொடுக்கப்படுகின்றன. காயம், இரத்தம் அல்லது சிறுநீர் போன்றவற்றில் தொற்றுகள் ஏற்படக் கூடும். உங்களுக்கு உடல்நலம் நன்றாகிவிட்டதாக உணர்ந்தால் கூட, பரிந்துரைத்த காலம்வரை ஆன்டிபயாட்டிக்குகளை முழுவதுமாக எடுத்து முடிப்பது மிக முக்கியம்.

### நீங்கள் CPO ஏற்பட்டுள்ள ஒரு நோயாளியாக இருந்தால்:
### (If you are a patient with CPO:)

- எளிதில் தொற்றுக்கு உள்ளாகக்கூடிய பிற நோயாளிகளுக்கு CPO பரவுவதைத் தடுக்க நாங்கள் விரும்புவதால், மருத்துவமனையில் கூடுதல் முன்னெச்சரிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
- தொடுகை முன்னெச்சரிக்கைகளைப் பயன்படுத்துமாறு மற்றவர்களுக்கு நினைவூட்டும் ஒரு சின்னம் உங்கள் அறையின் கதவில் வைத்திருக்கப்படும். கூடுதல் தகவல்களை அறிய, MyHealth.Alberta.ca தொடர்பு வேறாக்க முன்னெச்சரிக்கைகள் நோயாளிக் கவனிப்பு குறித்த துண்டுப் பிரசுரம் பார்க்கவும்.
- அத்தியாவசிய நோக்கங்களுக்காக (எ.கா. மருத்துவச் சோதனைக்காகச் செல்லுதல்) மட்டுமே உங்கள் அறையிலிருந்து வெளியேறுங்கள்.
- உங்கள் அறையிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு முறையும்:
  - சோப்பும் நீரும் கொண்டு அல்லது ஆல்கஹால் அடிப்படையான கை தேய்த்துக் துடைக்கும் திரவம் கொண்டு உங்கள் கைகளைச் சுத்தம் செய்யுங்கள். நீங்கள் கையுறைகளை அணிய வேண்டியதில்லை.
  - உங்களது பைஜாமாக்கள் அல்லது ஆடைகளுக்கு மேலாக சுத்தமான, புதிய மருத்துவமனை மேலாடையை (ஹவுஸ்கோட்) அணியுங்கள்.
  - உங்கள் காயங்களை ஒரு சுத்தமான துணியால் மூடுமாறு அல்லது உங்கள் காயத்தில் கட்டியுள்ள துணி அழுக்காகி அல்லது கழன்று இருந்தால் அதை மாற்றுமாறு உங்களைக் கவனித்துக்கொள்ள இருப்பவரிடம் கேளுங்கள்.
  - உங்கள் சக்கரநாற்காலி (ஆர்ம்ரெஸ்ட்கள்) அல்லது வாக்கர் கைப்பிடிகள், பிரம்பு அல்லது IV முனை போன்றவற்றிலுள்ள அதிகம் தொடப்படும் பகுதிகளைச் சுத்தம் செய்யுங்கள் அல்லது சுத்தம் செய்வதற்கு உதவி கேளுங்கள்.

## வீட்டில் செய்ய வேண்டியவை
## (What to do at home)

- வீட்டில், CPO தொற்று உட்பட தொற்று பரவுவதைத் தடுப்பதற்கு இந்த எளிய நடைமுறைகளைப் பயன்படுத்தலாம்:
  - தொற்றுகள் பரவுவதை நிறுத்துவதற்கு கை கழுவுவதே மிகச்சிறந்த வழியாகும். சோப்பும் தண்ணீரும் கொண்டு உங்கள் கைகளை ஒழுங்குமுறையாகக் கழுவுங்கள்.
  - தனிப்பட்ட பொருட்களை (எ.கா. துண்டுகள், ஆடை, பார் சோப், சவரக் கத்திகள் அல்லது விளையாட்டு உபகரணம்) மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளாதீர்கள்.
  - உங்களது வீட்டை, குறிப்பாகச் சமையலறையையும் குளியலறையையும் ஒழுங்குமுறையாகச் சுத்தம் செய்யுங்கள்.
  - ஒழுங்குமுறையான கழுவும் சுழற்சியில் வழக்கமான சலவை சோப்பை உபயோகித்து ஆடைகளைக் கழுவுங்கள்.
  - பகிர்ந்த பொருட்களை (எ.கா. விளையாட்டு உபகரணம் அல்லது கல்லாக்கள் போன்ற மேற்பரப்புகள்) வீட்டிற்குரிய தொற்றுநீக்கியைக் கொண்டு சுத்தம் செய்யுங்கள்.
  - தொற்று இருப்பதற்கான அறிகுறி ஏதும் உள்ளதா எனக் கண்டறிய மருத்துவரைப் பார்க்கவும்.
  - வடிந்துகொண்டிருக்கும் காயங்களைச் சுத்தமான, உலர்ந்த துணியால் மூடிவிடுங்கள்.
  - நீங்கள் சாதாரணமாக வேலைக்குச் செல்லலாம். நீங்கள் உணவுசார் தொழில்துறையில் வேலை செய்தால், நோய்க்கிருமி கலப்பதைத் தடுக்க, பாதுகாப்பான உணவு கையாளும் செயல்முறைகளை நீங்கள் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தவும்.
  - உங்களுக்கு CPO இருந்தால் அல்லது கடந்த காலத்தில் உங்களுக்கு இருந்திருந்தால், உங்கள் உடல்நலக் கவனிப்புப் பணியாளரிடம் கூறுங்கள்.

**24/7 நேரமும் செவிலியர் ஆலோசனை மற்றும் பொதுவான உடல்நலத் தகவல்களைப் பெற, 811 என்ற எண்ணில் ஹெல்த் லின்க்கை (Health Link) அழையுங்கள்.**

**புதுப்பிக்கப்பட்ட தேதி:** ஏப்ரல் 23, 2018

**எழுதியவர்:** தொற்றுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு (Infection Prevention and Control), அல்பேர்ட்டா உடல்நலச் சேவைகள் (Alberta Health Services)